செ.வெ.எண்.:37 நாள்: 26.02.2021

## சட்டமன்ற பொது தேர்தல் - 2021
## இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின் படி தேர்தல் நடத்திய விதிமுறைகள் உடனடியாக அமலுக்கு வருகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலர் டாக்டர்.வி.ஜெயசந்திர பானுரெட்டி.இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின் படி தமிழ்நாடு மாநில சட்டமன்ற தேர்தல் 2021 - நடைபெறுவது தொடர்பான தேர்தல் அட்டவணைகள் இந்திய தேர்தல் ஆணையத்தால் 26.02.2021 மாலை 5.00 மணி அளவில் வெளியிடப்பட்டது.

அதன் படி 06.04.2021 (செவ்வாய் கிழமை )அன்று தமிழகத்தில் உள்ள 234 சட்டமன்ற தொகுதிகளுக்கு தேர்தல் நடைபெற உள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள 51- ஊத்தங்கரை(தனி), 52- பர்கூர், 53- கிருஷ்ணகிரி, 54- வேப்பனஹள்ளி, 55- ஓசூர் மற்றும் 56- தளி ஆகிய 6 சட்டமன்ற தொகுதிகள் உள்ளது.

| வ.எண் | சட்ட மன்ற தொகுதி | தேர்தல்நடத்தும் அலுவலர் | அலுவலக தொலைபேசி எண் | தேர்தல் அலுவலரின் கைபேசி எண் |
|---|---|---|---|---|
| 1 | 51, ஊத்தங்கரை | திரு.க.சேதுராமலிங்கம் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் கிருஷ்ணகிரி | வட்டாட்சியர் அலுவலகம், ஊத்தங்கரை 04343-239303 | 9443670216 |
| 2 | 52, பர்கூர் | திருமதி.டி.பாக்கியலட்சுமி சமூக பாதுகாப்புத்திட்ட தனித்துணை ஆட்சியர், கிருஷ்ணகிரி | வட்டாட்சியர் அலுவலகம், பர்கூர் 04343-239301 | 9445461740 |
| 3 | 53, கிருஷ்ணகிரி | திருமதி.கோ.கற்பகவல்லி, வருவாய் கோட்டாட்சியர், கிருஷ்ணகிரி | வட்டாட்சியர் அலுவலகம், கிருஷ்ணகிரி 04343-236733 | 9445000429 |
| 4 | 54, வேப்பனஹள்ளி | திரு.எஸ்.கே.கனகராஜ் மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு நல அலுவலர் கிருஷ்ணகிரி | வட்டாட்சியர் அலுவலகம், சூளகிரி 04343-234677 | 9445000396 |
| 5 | 55, ஓசூர் | திரு.பொ.குணசேகரன் வருவாய் கோட்டாட்சியர், ஓசூர் | வட்டாட்சியர் அலுவலகம், ஓசூர் 04343-222622 | 9445000430 |
| 6 | 56, தளி | திரு.எம்.ரவிச்சந்திரன் உதவி ஆணையர்(கலால்) கிருஷ்ணகிரி | வட்டாட்சியர் அலுவலகம், தேன்கனிக்கோட்டை 04343-239301 | 9445074584 |

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 2298 வாக்குச்சாவடி மையங்கள் உள்ளது. அதில் 117 பகுதிகள் பதற்றமானவை என கண்டறியப்பட்டு அப்பகுதியில் உள்ள 286 வாக்குச்சாவடி மையங்கள் பதற்றமானவை என கண்டறியப்பட்டுள்ளது. மேற்படி வாக்குச்சாவடி மையங்கள் கண்காணிக்கப்பட்டு தேர்தல் அமைதியான முறையில் நடைபெற அனைத்து நடவடிக்கைகளும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்தேர்தல் பணியில் 14000 அரசு ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட உள்ளனர். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள 13723 மாற்றுத்திறனாளிகள் மற்றும் 80 வயதிற்கு மேற்பட்ட 28,543 வாக்காளர்கள் விருப்பத்தின் அடிப்படையில் அஞ்சல் மூலம் வாக்களிக்க அனைத்து வசதிகளும் செய்யப்பட உள்ளது.

அரசு அலுவலகங்களில் தலைவர்களின் புகைப்படங்கள் மற்றும் அரசு விளம்பரங்கள் அகற்றவும் அரசு கட்டிடங்கள், சாலை மேம்பாலங்கள், பொது இடங்களில் ஏற்கனவே எழுதப்பட்டுள்ள விளம்பரங்கள் 48 மணி நேரத்தில் அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அரசியல் கட்சி தலைவர்கள், சிலைகள் மறைப்பதற்கும் அரசியல் கட்சி கொடி கம்பங்கள் பாதுகாப்பான முறையில் 72 மணி நேரத்தில் அகற்றிட சம்மந்தப்பட்ட / அங்கீகரிக்கப்பட்ட அனைத்து கட்சி பிரதிநிதிகளை கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். பறக்கும்படை உட்பட 42 குழுக்கள் GPS கருவி பொருத்தப்பட்ட வாகனத்தில் தேர்தலை கண்காணிக்க அமைக்கப்பட்டுள்ளது. ரூ.50000/-க்கும் மேற்பட்டு சரியான ஆவணம் இன்றி பணம் எடுத்துச்சென்றால் பறிமுதல் செய்து அரசு கருவூலத்தில் ஒப்படைக்கப்படும். விளம்பரங்கள் நாளிதழ்கள், வாட்ஸ்அப் மற்றும் அனைத்து தொலைக்காட்சிகளில் அனுமதி இன்றி வரும் விளம்பரங்கள் ஊடக சான்றிதழ் மற்றும் கண்காணிப்பு குழுவால் கண்காணிக்கப்பட்டு தேர்தல் செலவினங்களில் சேர்க்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும் அனைத்து தொகுதியிலும் நிலையான கண்காணிப்பு குழுக்களும் 24 மணி நேரமும் இயங்கும். பொதுமக்கள் தேர்தல் தொடர்பான புகார்களை கட்டணமில்லா தொலைபேசி எண் 1077 மற்றும் 1950 என்ற எண்ணில் தெரிவிக்கலாம். மேலும் குறுந்தகவல் மூலம் மாவட்ட தேர்தல் கட்டுப்பாட்டு அறையில் இன்று முதல் இயங்கி வரும் 6369700230 என்ற கைபேசி எண்ணில் 24 மணி நேரமும் தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலர் டாக்டர்.வி.ஜெயசந்திர பானுரெட்டி.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள்தொடர்பு அலுவலகம், கிருஷ்ணகிரி.